01.04.2025

O.S.No.552 of 2023

PW1 திருமதி.ருக்மணியம்மாள் ( பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை):-

சாட்சி வா.த.சா.1 இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

நானும் என்னுடைய மகள்களும் சேர்ந்து தான் பிரதிவாதி லோகநாதனுக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கின்றோம். தாவா சொத்து காமகோட்டிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். காமகோட்டி ஆவடியில் உள்ள இராணுவ சீருடை தயாரிப்பு ஆலையில் பணிபரிந்து வந்தார் என்றால் சரிதான். தற்பொழுது நான் குடியிருந்து வருகின்ற எண். 41, 5வது தெரு, காமராஜ் நகர், ஆவடி என்கின்ற முகவரியில் உள்ள வீடு பார்வதியம்மாளுக்கு சொந்தமானது என்றால் என்னுடைய மாமனார் காமகோட்டிக்கும், என்னுடைய மாமியார் பார்வதிக்கும் சொந்தமான வீடு. நான் தாக்கல் செய்திருக்கின்ற வா.த.சா.ஆ.12 கிரைய பத்திரம் காமகோட்டி பெயரில் உள்ள கிரைய பத்திரம் என்றால் அது என்னுடைய கணவர் மற்றும் காமகோட்டி இருவரும் சேர்ந்து வாங்கிய வீடு. வா.த.சா.ஆ.12 அசல் பத்திரம் பிரதிவாதியிடம் தான் இருக்கின்றது என்றால் சரிதான். அதனை திருடிக்கொண்டு போய்விட்டார். என்னுடைய கணவர் சண்முகம் பிறந்த ஊர் பள்ளூர். என்னுடைய கணவர் சண்முகத்தின் அம்மாவின் பெயர் பார்வதியம்மாள். சண்முகத்தின் அப்பா சண்முகம் சிறு வயதாக இருந்த பொழுதே இறந்துவிட்டார் என்றால் சரிதான். சண்முகத்தின் அப்பா பெயர் எனக்குத் தெரியாது. சண்முகத்தை காமகோட்டி தத்தெடுத்து வளர்த்தார். சண்முகம் 10ம் வகுப்பு வரை படித்திருக்கலாம். அம்பத்தூரில் தான் படித்ததாக சொன்னார். எனக்கு திருமணம் ஆகும் பொழுது எனது கணவர் சண்முகம் துணி தைப்பதில் என்னுடயை மாமனாருக்கு உதவியாக இருந்தார். என்னுடைய கணவர் துணிதைப்பதில் உதவியாக இருந்ததை காட்டக்கூடிய ஆவணம் எதுவும்

என்னிடம் இல்லை. எனக்கும் சண்முகத்திற்கும் பெரியவர்களால் நிச்சயம் செய்யப்பட்டு திருமணம் நடைபெற்றது. சண்முகம் எனக்கு திருமணத்திற்கு முன்பு உறவினர் கிடையாது. என்னுடைய மகள்கள் 4 பேரும் சோலிங்கரில் வைத்து பிறந்தார்கள். என்னுடைய முதல் மகள் நிர்மலா 12ம் வகுப்பு வரை படித்திருக்கின்றார். 12ம் வகுப்பை சோலிங்கரில் வைத்து படித்து முடித்தார். காமகோட்டி மனைவி பார்வதி இறந்த பிறகு தான் நாங்கள் குடும்பமாக சென்னை வந்தோம் என்றால் சரியல்ல. இறப்பதற்கு முன்பாகவே வந்தோம். எந்த வருடம் சென்னைக்கு வந்தோம் என்பதும், பார்வதி எப்பொழுது இறந்தார் என்பதும் ஞாபகம் இல்லை. தற்பொழுது நான் தங்கியிருக்கும் சொத்தை பார்வதி என்னுடைய கணவருக்கு எழுதிக்கொடுத்தாரா என்றால் பார்வதி எழுதிக்கொடுக்கவில்லை. என்னுடைய மாமனார் காமகோட்டி எழுதிக்கொடுத்தார். தாவா சொத்தை காமகோட்டி என்னுடைய கணவர் பெயருக்கு எழுதிகொடுக்கவில்லை என்றால் சரிதான். பார்வதியின் சொந்த ஊர் செம்பேடு, அவர் உடன் பிறந்தவர் என்னுடைய மாமியார் லட்சுமியம்மாள் மட்டுமே. அவருடன் பிறந்த அண்ணன் ஒருவர் இருந்தார் அவர் இறந்துவிட்டார். என்னுடைய கணவர் 2019ல் தற்பொழுது வசித்து வரும் வீட்டில் வைத்து இறந்து போனார். வா.த.சா.ஆ.3 வாரிசு சான்றிதழில் நான் தற்பொழுது தங்கியிருக்கும் முகவரிதான் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. காமகோட்டியுடன் ஆவடி தொழில் சாலையில் வேலைபார்த்த குப்பம்மாள் என்பரை தெரியும் அவர் தாவா சொத்தில் வாடகைதாரார். அவர் காமகோட்டியுடன் வேலைபார்த்த விவரம் எனக்கு தெரியுமா என்ற விவரம் எனக்குத் தெரியாது. என்னுடைய கணவர் மற்றும் காமகோட்டியின் வாரிசு சான்றிதழ்களை நான் தான் மனு தாக்கல் செய்து வாங்கினேன். என்னுடைய கணவரும், காமகோட்டியும் 2019ம் இறந்துபோய்விடார்கள். என்னுடைய கணவருக்கு 2019ம் ஆண்டு வாரிசு சான்றிதழ் வாங்கினேன். காமகோட்டியின் வாரிசு சான்றிதழ் வாங்குவதில் தாமதம் ஆனதால் 2022ல் காமகோட்டியின் வாரிசு சான்றிதழை வாங்கினேன். வா.த.சா.ஆ.3 என்னுடைய கணவரின் வாரிசு சான்றிதழில் அவரின் தகப்பனார்

பெயர் காமகோட்டி என்று காட்டப்பட்டுள்ளது. ஆனால் காமகோட்டி பெயர் சண்முகத்தின் வாரிசுதாராாக காட்டப்படவில்லை. காமகோட்டியின் வாரிசு சான்றிதழில் எனது கணவர் சண்முகத்தின் பெயர் மகன் என்று காட்டப்பட்டுள்ளது. தத்து மகன் என்று காட்டப்படவில்லை என்றால் சரிதான். எனக்கும் என்னுடைய கணவருக்கும் இடையே 10 வயது வித்தியாசம்.

(அறிவார்ந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கா ஒத்திவைப்படுகின்றது)